www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

# Ranipet District

## மூன்றாம் திருப்புதல் பொதுத்தேர்வு - 2023

**பத்தாம் வகுப்பு** பதிவு எண் : [ ]

**தமிழ்**

நேரம் : 3.00 மணி | பகுதி - 1 ( மதிப்பெண்கள் 15) . | மதிப்பெண்கள் : 100

குறிப்புகள் :

I) அனைத்து வினாக்களுக்கும் விடை யளிக்கவும். 15 x 1 = 15

II) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் ஏற்புடைய விடையினை தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்

1. எந்தமிழ்நா என்பதை பிரித்தால் இவ்வாறு வரும்
   அ) எந் + தமிழ் + நா ஆ) எந்த + தமிழ் + நா இ) எம் + தமிழ் + நா ஈ) எந்தம் + தமிழ் + நா
2. "பாடு இமிழ் பனிக்கடல் பருகி " என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி யாது?
   அ) கடல் நீர் ஆவியாகி மேகமாதல் ஆ) கடல் நீர் குளிர்ச்சி அடைதல்
   இ) கடல் நீர் ஒலித்தல் ஈ) கடல் நீர் கொந்தளித்தல்
3. "உனதருளே பார்ப்பன் அடியேனே" யாரிடம் யார் கூறியது?
   அ) குலசேகராழ்வாரிடம் இறைவன் ஆ) இறைவனிடம் குலசேகராழ்வார்
   இ) மருத்துவரிடம் நோயாளி ஈ) நோயாளியிடம் மருத்துவர்
4. வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர் வகை
   அ) குலை வகை ஆ) மணி வகை இ) கொழுந்து வகை ஈ) இலை வகை
5. தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி.கருதியது
   அ) திருக்குறள் ஆ) புறநானூறு இ ) கம்பராமாயணம் ஈ) சிலப்பதிகாரம்
6. சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனையும் சவாலுமாக ஜெயகாந்தன் கருதுவது
   அ) அரசின் நலத்திட்டங்களை செயல்படுத்துதல் ஆ) பெற்ற சுதந்திரத்தை பேணிக்காத்தல்
   இ) அறிவியல் முன்னேற்றம் ஈ) வெளிநாட்டு முதலீடுகள்
7. *மரபு தொடர்பான பொருளை பொருத்துக.*
   1) கயிறு திரித்தல் - i) அதிகமாக பேசுதல்
   2) கொட்டி அளத்தல் - ii) சொல்லாமல் சொல்லுதல்
   3) முதலைக்கண்ணீர் - iii) பொய் கூறுதல்
   4) கம்பி நீட்டுதல் - iv) பொய் அழுகை
   அ) 1 - iv 2-ii 3-iii 4-i ஆ) 1 - iii 2-i 3-iv 4-ii
   இ) 1 - i 2-iii 3-ii 4-iv ஈ) 1 - iv 2-ii 3-i 4-iii
8. கட்டுரையைப் படித்து ஆசிரியர் மாணவர்களுக்குப் பரிசு வழங்கினார்.
   *- இத்தொடரில் இடம்பெற்றுள்ள வேற்றுமை உருபுகள்*
   அ) ஐ. ஆல் ஆ) ஆல். கு இ) ஐ. கு ஈ) இன். கு
9. திருக்குறளில் உள்ள பொருட்பாலில் உள்அதிகாரங்களின் எண்ணிக்கை தமிழ் எண்ணுருவில்
   அ) கO ஆ) உரு இ) எO ஈ) அO
10. காலம் சார்ந்த கரந்த பெயரெச்சம் என்பது
    அ) வினைத்தொகை ஆ) உம்மைத் தொகை இ) பண்புத்தொகை ஈ) அன்மொழித்தொகை
11. *நிலத்திற்கேற்ற தொழிலைப் பொருத்துக*
    அ) குறிஞ்சி - 1) உப்பு விளைவித்தல்
    ஆ) முல்லை - 2) நெல்லரிதல்
    இ) மருதம் - 3) நிரை மேய்த்தல்
    ஈ) நெய்தல் - 4) தேனெடுத்தல்
    அ) அ-4 ஆ-3 இ-2 ஈ-1 ஆ) அ-3 ஆ-2 இ-4 ஈ-1
    இ) அ-1 ஆ-3 இ-2 ஈ-4 ஈ) அ-4 ஆ-1 இ-2 ஈ-3



*பாடலை படித்து வினாக்களுக்கு விடையளி*

முத்தமிழ் துய்ப்பதால் முச்சங்கம் கண்டதால்
மெத்த வணிகலமும் மேவலால் நித்தம்
அணைகிடந்தே சங்கத் தவர்க்காக்க ஆழிக்கு
இணைகிடந்த தேதமிழ் ஈண்டு

12. இப்பாடலை இயற்றியவர் யார்?
    அ) பாவலரேறு பெருஞ்சித்திரனார் ஆ) பாவாணர்
    இ) தமிழழகனார் ஈ) காளமேகப்புலவர்
13. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் எது?
    அ) நற்றிணை ஆ) முல்லைப்பாட்டு இ) குறுந்தொகை ஈ) தனிப்பாடல் திரட்டு
14. பாடலில் இடம்பெற்ற சீர் மோனை
    அ) முத்தமிழ்- மெத்த ஆ) முத்தமிழ் -முச்சங்கம் இ) அணை-இடந்தே ஈ) உணர்-எழுப்ப
15. தொழிற்பெயர் அல்லாத சொல்
    அ) துய்த்தல் ஆ) மேவல் இ) அணிகலன் ஈ) காணல்

### பகுதி - 2

### பிரிவு - 1

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க. 4 x 2 = 8
(21 வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க)

16. வசன கவிதை - குறிப்பு வரைக.
17. *விடைகளுக்கு ஏற்ற வினாக்கள் அமைக்க*
    அ) உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு மலேசியா
    ஆ) மா.பொ.சி அம்மானை பாடல்களை அடிக்கடி பாடி பாடி பிள்ளை பருவத்திலேயே இலக்கிய அறிவை வளர்த்துக் கொண்டார்.
18. தாவரங்களின் இளம் பயிர் வகைகளை குறிக்கும் சொற்களில் நான்கினை எழுது.
19. கரப்பிடும்பை இல்லார் - *இத்தொடரின் பொருள் கூறுக.*
20. வருங்காலத்தில் தேவையான கருதுகின்ற செயற்கை நுண்ணறிவு பொதிந்த இரண்டு அறிவியல் கண்டுபிடிப்புகளைக் குறிப்பிடுக ?
21. முயற்சி எனத் தொடங்கும் திருக்குறளை அடி மாறாமல் எழுதுக.

### பிரிவு - 2

எவையேனும் ஐந்துக்கு விடையளிக்க. 5 x 2 = 10

22. *கலைச்சொற்கள் தருக*
    அ) Myth ஆ) Folk literature
23. புறத்திணைகளில் எதிரெதிர் திணைகளை அட்டவணைப்படுத்துக
24. *இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக*
    அ) விடு -வீடு ஆ) கொடு - கோடு
25. ஐய வினா என்பதென்ன? உதாரணம் கொடு.
26. வாழ்க -*பகுபத உறுப்பிலக்கணம் தருக*
27. தம்பி எங்கே நிக்கிற நீங்க சொன்ன இடத்துல தானே எதுத்தாப்புல ஒரு டீ ஸ்டால் இருக்குது.
    *- உரையாடலில் உள்ள பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.*
28. *மரபுத் தொடர்களுக்கான பொருள் அறிந்து தொடரில் அமைக்க.*
    அ) அள்ளி இறைத்தல் ஆ) ஆறப் போடுதல்

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu



பகுதி - 3

பிரிவு - 1

இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடை அளிக்க. 2 x 3 = 6

29. உயிராக நான் பல பெயர்களில் நான் நான்கு திசையிலும் நான் இலக்கியத்தில் நான் முன்னீர் நாவாய் ஓட்டியாக நான் முதலிய தலைப்புகளில் காற்று தன்னை பற்றி பேசுகிறது இன்றைய சூழலில் நான் என்று நீர் தன்னை பற்றி பேசுவதாக உன்னுடைய கற்பனையில் மூன்று கருத்துக்களை எழுதுக

30. உரைப் பத்தியை படித்து வினாக்களுக்கு விடை தருக

அறம் கூறும் மன்றங்கள் அரசனின் அறநெறி ஆட்சிக்குத் துணை புரிந்தன. அறம் கூறு அவையும் பற்றி அறம் அறக் கண்ட நீதிமான் அவையம் என்கிறது புறநானூறு. உறையூரிலிருந்து அற அவையம் தனி சிறப்பு பெற்றது என்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. மதுரையில் இருந்த அவையம் பற்றி மதுரை காஞ்சி குறிப்பிடுகிறது. அங்குள்ள அவையம் துலாக் கோல் போல நடுநிலை மிக்கது என்கிறது.

அ) அரசனின் அறநெறி ஆட்சிக்கு துணை புரிந்தவை எவை ?

ஆ) அவையம் பற்றி புறநானூறு கூறுவது யாது?

இ) மதுரையில் இருந்த அவையம் எப்படி இருந்ததாக மதுரைக்காஞ்சி குறிப்பிடுகிறது?

31. "தலையை கொடுத்தேனும் தலைநகரை காப்போம்" - இடம் சுட்டிப் பொருள் விளக்குக

பிரிவு - 2

இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடை அளிக்க. 2 x 3 = 6

*(34 ஆவது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க)*

32. மாறாத காதல் நோயாளன் போல் என்னும் தொடரில் உள்ள உவமை சுட்டும் செய்திகளை விளக்குக?

33. கவிஞன் யானோர் காலக்கணிதம் எனத்தொடங்கும் கவிஞர் கண்ணதாசனின் கவிதையில் உங்களை கவர்ந்த மூன்று தொடர்களை எழுதுக?

34. 'நவமணி வடக்க யில்போல்' - எனத் தொடங்கும் தேம்பாவணி பாடலை அடிமாறாமல் எழுதுக

பிரிவு - 3

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க:- 2 x 3 = 6

35. ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக

36. நிரல்நிறை அணியை விளக்குக?

37. கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்ட தமைச்சு - இக்குறட்பாவினை அலகிட்டு வாய்ப்பாடு தருக

பகுதி - 4 (மதிப்பெண்கள் 25 )

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 5 x 5 = 25

38. அ) கருணையனின் தாய் மறைவுக்கு வீரமாமுனிவர் பூக்கள் போன்ற உவமைகளாலும் உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரிக்க. *(அல்லது)*

ஆ) மனோன்மணியம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும் பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக.

39. அ) பெருந்தொற்று ஏற்படுவதைத் தடுக்கத் தேவையான முன்னெச்சரிக்கைகளை விவரித்துச் சிற்றூரில் உள்ள உங்களது தாத்தா பாட்டிக்கு கடிதம் ஒன்றை எழுதுக. *(அல்லது)*

ஆ. நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில் "உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்" என்ற உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி அந்நாளிதழ் ஆசிரியருக்கு கடிதம் எழுதுக.



40. *காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.*



41. வேலூர் மாவட்டம் ஊதூர்- 7 பாரதி தெருவில் வசிக்கும் அறிவழகன் மகன் அறிவுச்சுடர் ஊதூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் படிக்கிறார். அவர் விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தில் உறுப்பினராக சேர்ந்து கால்பந்து விளையாட்டில் பயிற்சி பெற விரும்புகிறார். தேர்வர் தம்மை அறிவுச்சுடராக கருதி கொடுக்கப்பட்டுள்ள உறுப்பினர் சேர்க்கை படிவத்தை நிரப்புக.

42. அ) தமிழக பாரம்பரிய கலைகளைப் பாதுகாக்கவும் வளர்க்கவும். மேலும் பரவலாக்கவும் நீங்கள் செய்ய விரும்புவதை ஐந்தை வரிசைப்படுத்தி எழுதுக.

*(அல்லது)*

ஆ) *மொழி பெயர்க்க.*

If you talk to a man in a language he understands that goes to his head if you talk to him in his own language that goes to his heart. Language is the road map of a culture it tells you where it's people come from and where they are going.

பகுதி - 5 3 x 8 = 24

( மதிப்பெண்கள் 24)

43. அ) சங்க காலத்து அறங்கள் இன்றும் தேவையே என்பதற்கு எடுத்துக்காட்டுகள் தந்து விரிவாக விளக்குக.

*(அல்லது)*

ஆ) நிகழ் கலைகள் ஏதேனும் ஐந்தினை கூறி அவற்றை வளர்த்தெடுக்கும் வழிமுறைகள் கூறி விளக்குக.

44. அ) ராமானுஜர் நாடகத்தை கதை வடிவில் எழுதுக

*(அல்லது)*

ஆ) மங்கையராக பிறப்பதற்கே என்ற துணைப்பாடத்தில் வாயிலாக முன்னேற்றம் அடைந்த மங்கையர் சிலரை பற்றி எழுதுக.

45. *குறிப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று எழுதி தலைப்பிடுக.*

அ) முன்னுரை - சாலை பாதுகாப்பு உயிர் பாதுகாப்பு - சாலை விதிகள்- ஊர்தி ஓட்டுநருக்கான விதிகள்- விபத்துக்களை தவிர்ப்போம் விழிப்புணர்வு தருவோம்- முடிவுரை

*(அல்லது)*

ஆ) முன்னுரை - விண்வெளியில் தமிழரின் அறிவு - கல்பனா சாவ்லா - விண்வெளி ஆய்வு - பூமி திரும்புதல் மறைவு - வருங்காலத்தில் மேற்கொள்ள வேண்டியது - முடிவுரை.

******

-E.VIKRAM (M.Sc.,B.Ed(Mathematics))
Now I am Working in Orange International Matriculation Hr. Sec. School.,Aagaram Village ,Vinnamangalam Post, Aagaram Village ,Vinnamangalam Post , Arni -632316.,Tiruvannamalai district.
& Sri Rajalakshmi Tuition Centre.,Arni -632301.,Tiruvannamalai district.

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com